1993 ஏப்ரல் 7]

269—

மருதை ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்தல்

*9445—திரு. ஏ. தா. பொன்னுவேலு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வரகூர் தொகுதி, ஆலத்தூர் ஒன்றியம் கொளத்தூருக்கும் கூடலூருக்கும் இடையே உள்ள மருதை ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. தா. பொன்னுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பொதுப் பணித்துறையிலே புரட்சிகரமாக இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிற நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரவர்களுடைய கருத்துக்கள் இப்பொழுது நடைமுறையில் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய தொகுதியிலே ஆலத்தூர் ஒன்றியத்தில் இலுப்ப குடிக்கும் கூடலூருக்கும் இடையே, இலுப்பக்குடிக்கும் கொளத்தூருக்கும் இடையே உள்ள மருதை ஆறு வெள்ளப் பெருக்கினால் அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் பெரம் பலூர் செல்லவும், அரியலூர் செல்லவும் முடியாத நிலையிலே மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதைக் கடந்த நிதியாண்டிலேகூட நான் மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஆனால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் எந்தப் பகுதியிலும் செல்ல முடியாத ஒரு தீபகற்பம் போல இருப்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதை இந்த ஆண்டிலேயாவது மறுபரி சீலனை செய்து அந்தத் தொகுதி மக்களுடைய நல்வாழ்வினை, இன்றைக்கு நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அதை மறுபரிசீலனை செய்து அந்த மருதை ஆற்றுக்கு ஒரு பாலம் அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டிருக் கின்ற அந்தப் பாலம் ஏறத்தாழ 18 இலட்சம் ரூபாய்— ஒரு தரைப்பாலம் கட்டுவதற்கு மதிப்பிடப்பட்டிருக்கிறது. 60 மீட்டர் நீளத்திலே கட்டப்பட வேண்டும். ஆகவே, எல்லாத் தொகுதிகளுக்கும் மொத்தமாகப் பாலங்கள் கட்டுவது என்பது

[1993 ஏப்ரல் 7

மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நன்றாகத் தெரியும் இருக்கின்ற நிதிநிலை இடம் தராது. இந்த ஆண்டு ஒரு புதிய திட்டத்தைக்கூட, வருகின்ற மானியக் கோரிக்கையிலே அறிவிக்க இருக்கிறோம். ஆகவே, வரும் ஆண்டுகளிலே இருக்கின்ற நிதியாதாரத்தை வைத்து, அந்தப் பகுதியிலே இருக்கின்ற போக்குவரத்தைப் பொறுத்து, எதற்கு முன்னுரிமை கொடுக்கலாம் என்பதைப் பரிசீலித்து இந்த அரசு நடவடிக்கையெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. தா. பொன்னுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூடலூருக்கும் கொளத்தூருக்கும் உள்ள அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு இயலவில்லை என்றாலும் இலுப்பக்குடிக்கும் கொளத்தூருக்கும் உள்ள அந்த ஆற்றுக்கு ஒரு பாலம் அமைத்தால் அந்தப் பகுதிக்கு மிகவும் நலமாக இருக்கும். அதை மறுபரிசீலனை செய்து அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விடும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மருதை ஆற்றில் குறுக்கே கட்டப்பட வேண்டிய பாலம் சம்பந்தமாக வினாக்கள் சொல்லியிருக்கிறார்கள். அது சம்பந்தமாகத்தான் நான் பதிலுரை சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் இப்பொழுது கேட்பது இந்தப் பாலமா அல்லது வேறா என்பதைத் தெளிவுபடுத்தினால் அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 270 திரு. கி. தருமலிங்கம் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

270—

வரதலம்பட்டு கிராமத்தில் காட்டாற்றின் மேல் தரைப்பாலம் கட்டுதல்.

*0673—திரு. கி. தருமலிங்கம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதியில் அணைக்கட்டு—ஒடுகத்தூர் (வன) கிராமப்புற நெடுஞ்சாலையில் வரதலம் பட்டு கிராமத்தின் அருகில் காட்டாற்றின் மேல் தரைப்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைக்குத் திட்டம் ஏதுமில்லை.